1971 ஜூன் 25]

Buckingham Canal Scheme

* 55 Q.—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stage of the Buckingham Canal excavation scheme?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த பக்கிங்காம் கால்வாய்த் திட்டமானது பத்தாண்டுக் காலமாக தாமதப்பட்டு, சட்ட மன்றத்திலே விவாதிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருப்பது எவ்வளவு நாளில் பதில் வர வேண்டும் என்று எழுதியிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பிரச்சினை பல ஆண்டு காலமாக தாமதப்பட்டிருப்பது என்பது உண்மை தான். 1958-ல் அமைக்கப்பட்ட உயர் அதிகாரத் தொழில் நுட்பக் குழு, கால்வாயைப் பெரிய அளவில் அகலப்படுத்தி, ஆழப்படுத்த 470 லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு இந்திய சர்க்காருக்கு அதன் இசைவுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அதற்கு இசைவு கொடுக்கவில்லை. அவர்கள் காஸ்ட் பெனிபிட் ரேஷியோ ஸ்டடி செய்து ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும் என்று சொல்லிற்று. அதன்படி பார்த்ததில் செலவும் பயனும் 1:2:46 என்ற அளவில் இருந்தது, மறுபடியும் ஆந்திரா பக்கிங்காம் கால்வாயையும், தமிழ்நாடு கால்வாயையும் ஒருங்கிணைந்த திட்டம் மாகச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. 1968-ல் இந்திய அரசு நியமித்த உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துக் குழு தனது அறிக்கையை அனுப்பியது. தமிழ் நாடு, ஆந்திர மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்படுவதற்கு இக் குழு தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது. தற்போது ஆய்வுக் குழுவில் சேர்ப்ப தற்காக இவ்வரசின் பிரதிநிதி ஒருவரைத் தெரிவிக்குமாறு இந்திய அரசு இந்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. நம்முடைய பொதுப்பணித் துறைச் செயலாளரையோ அல்லது மேற்பார்வை பொறியாளரையோ நியமிப்பது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். ஆர். கண்ணன் : சார், இந்தக் கால்வாயின் போக்கு வரத்தைப் பொறுத்து கட்டை விலை உயர்வு கூட இருக்கிறது. மழை காலங்களில் நகரத்தை அடுத்துப் பலவிடங்களில் கரைகள் இல்லாததால் கால்வாய் தண்ணீர் தேங்கி, ஸ்லம்களில் போக்கு வரத்து பாதிக்கப்பட்டு மக்கள் அவதிப்படும் நிலை இருக்கிறது. ஆகவே, இதற்கு உடனடியாக கரை அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் குறிப்பிட்டுள்ள குறைபாடுகளைத் தவிர்க்கத்தான் 67-ல் 40 லட்ச ரூபாயில் வேலைகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. 44 லட்ச ரூபாய் அளவில் வேலைகள் முடிந்த பிறகு, அந்தக் கால்வாயின் ஆழத்தை இன்னும் இரண்டு அடி அதிகப்படுத்த மத்திய சர்க்கார் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது மத்திய சர்க்காரிடமிருந்து அனுமதி வந்தவுடன் வேலை துவங்கப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் செயல்பட காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அதிலேயிருந்து வரும் துர்நாற்றம் சுகாதாரக் கேடாக இருப்பதால், துர்நாற்றத்தை முதலில் அகற்றுவதற்கு ஆன முயற்சிகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றி விளக்கம் பெறத்தான் ஆய்வுக் குழு ஒன்று அமைப்பதும், பரிசீலனை செய்வதும், மத்திய சர்க்கார் அனுமதி பெற்றவுடன் மேற்கொண்டு வேலைகள் செய்யலாம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இந்த பக்கிங்காம் கால்வாய் திட்டத்திற்காக மத்திய சர்க்காரிடம் பல ஆண்டுகளாக நாம் வேண்டிக் கொண்டிருக்கிறோம். அண்டை மாநிலமாகிய மைசூர் மாநிலத்தில் மத்திய சர்க்காருடைய ஒப்புதலேயில்லாமல், ஒரு அணைக்கட்டையே கட்டும்போது, நாம் மத்திய சர்க்காரின் ஒப்புதலை எதிர்பாராமலோ அல்லது ஒப்புதல் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோ, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 1958-லேயே கேட்கப்பட்டது. ரூ. 470 இலட்சம் செலவில் திட்டம் இருந்தது. புள்ளி விவரங்கள் படி இப்பொழுது எவ்வளவு ஆகுமோ, இது நிதி பற்றிய பிரச்சினை, அதிகாரம் பற்றியது அல்ல. மத்திய சர்க்காரிடமிருந்து நாம் நிதி பெற வேண்டியிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இது ஒரு முக்கியமான திட்டம். விலைகள் கூட இதனால் குறைகிறது. ஆகவே இதை அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முயற்சி செய்யப்படுமா? அந்த வகையில் காலதாமதம் தவிர்க்கப்படுமா? அவர்களிடமிருந்து பதில் வரவில்லை என்றால், வற்புறுத்தி பதிலைப் பெறுகின்ற வழியைத் தேடுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பல கட்டங்களில் பல விளக்கங்களைக் கேட்டார்கள். மத்திய சர்க்காரின் நல்ல எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு செய்ய நம் அரசு வற்புறுத்தி வருகிறது. இப்பொழுது நம் அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். விரைவில் முடிவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

State Civil List

*** 46** *Q.*—THIRU A. SWAMIDHAS :
THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when the last Civil List for the State was published ; and

(*b*) the steps taken to publish a new list?